

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து : ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள்: ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள், இரக்கமுள்ள இயேசுவைப்போல் ஒப்புரவு, நீதி மற்றும் சமாதானத்தின் இறைவாக்களிக்கும் சாட்சிகளாக திகழ வேண்டுமென்று**

மே மாத கரு : **மரியா அனைத்து நாடுகளின் விண்மீன்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மே 28 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 7ஆம் ஞாயிறு- உலக தொலைதொடர்பு தினம் |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் 7ஆம் ஞாயிறு- உலக தொலைதொடர்பு தினம் |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | உயிர்ப்பின் 7ஆம் ஞாயிறு |
| மே 29 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| மே 30 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| ஜூன் 1 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித ஜஸ்டின் |
| ஜூன் 2 வெள் | மாலை 4.30 | திருமணம் (த) | எரிக் ராஜ் அருளப்பன் & ஆரோக்கியமேரி கனகரெத்னம் |
| | மாலை 6.30 | திருப்பலி (த) | புனிதர்கள் மார்சலின் & பீட்டர் |
| ஜூன் 3 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனிதர்கள் சார்லஸ் லுவாங்கா |
| | காலை 11.00 | திருமணம் (ஆ) | பெனடிக் பேரிஷ் K அருளானந்தம் & சில்வியா தேவதாசன்@ ரோபர்ட் |
| | மாலை 4.30 | திருமணம் (த) | அமிர்த ராஜ் த/பெ ஜோக்கிம் & ஏனா சப்ரினா த/பெ ஜேக்கப் |
| ஜூன் 4 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பெந்தகோஸ்தே ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பெந்தகோஸ்தே ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| **மே 27 ~ ஜூன் 4** | **மாலை 8.00~9.00** | **ஆலயம்** | **பெந்தகோஸ்தே நவநாள் (ஆ, த)** |
|---|---|---|---|
| மே 28 ஞா | காலை 10.30 | பெர். மை 1-1 | உறுதிபூசுதல் மாணவர்கள் ஒன்றுகூடுதல் |
| | மாலை 7.00 | பெர். மை 1-1&1-2 | RCIA வேட்பாளர்கள் & ஆதரவாளர்கள் - ஒன்றுகூடுதல் |
| மே 29 திங் | மாலை 8.00 | பெர். மை 1-3 | புனித அகஸ்டின் பாடற்குழு பயிற்சி (த) கூட்டம் |
| மே 30 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| ஜூன் 3 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| 21 மே ~ 4 ஜூன் 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 11 ஜூன் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

<u>ஜூன் மாத திருமணம் 2017</u>

ஜூன் 24 காலை 11.00 சடங்கு (த) எவெலினோ செபஸ்டியன் த/பெ அற்புத ராஜூ & யுவனேஸ்வரி த/பெ அர்ஜூனன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பாரம்பரிய காட்சியகம்:** ஈப்போ, லூர்து பாரம்பரிய காட்சியகத்திற்கு பதிவு, ஆராய்ச்சி & பராமரிப்பு செய்ய உறுப்பினர்களும், தன்னார்வலர்களும் மிகவும் தேவைப்படுகிறார்கள். ஆர்வமுள்ளோர் உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும்.

**2. இளைஞர்களின் வாழை இலை மதிய உணவு**: உங்களுக்காக மண்டபத்தில் மதிய உணவை தயார்செய்யும் நமது இளைஞர்களுக்கு தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள். உங்களுக்கான கூப்பனில் குறிப்பிடப்பட்டிருக்கும் உணவுக்கான நேரத்தை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு இன்னும் கூப்பன்கள் தேவைப்பட்டால் மண்டபத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

**3. அன்னை மரியாளோடு நடப்போம்**: இந்நிகழ்வு எல்லா கல்லூரி மாணவர்களுக்கும், பங்கு மக்களுக்கும் தயாரிக்கப்பட்டது; இந்நிகழ்வில் அன்னை மரியாள் மாணவர்களுடன் பயணிப்பதின் அடையாளமாக பாத்திமா அன்னையின் திருவுருவச்சிலை இப்பங்கிற்கு கொண்டுவரப்படும். நாள்: 11 ஜூன் (ஞாயிறு) ~ 17 ஜூன் (சனி) 2017 நேரம்: மாலை 8.00 ~ 9.30 இடம்: புனித லூர்து அன்னை தேவாலயம், ஈப்போ தொடர்புக்கு: பிமஇக (PDYN) அலுவலகம்- (04-2274851)

**4. பெந்தகோஸ்து நவநாள்:** பெந்தகோஸ்து கொண்டாட்டத்தை முன்னிட்டு தூய ஆவியானவருக்கு 9 நாட்கள் நவநாள் 27 மே (சனி) ~ 4 ஜூன் (ஞா) வரை இரவு 8.00மணிக்கு ஆலயத்தில் புகழாராதனையும், இறைவார்த்தை பகிர்வும், நடைபெறும். வாருங்கள் தூய ஆவியானவரின் ஆற்றலோடு திருமகன் இயேசுவின் வழியாக இறைவனை மகிமைப்படுத்துவோம்.

**5. 2017/ 2018 முதியோர் திருமுழுக்கு- புதிய ஆள் சேர்ப்பு (யோவான் 1:39) "வந்து பாருங்கள்"**

புதிய வகுப்புகள் 22 ஜூன் 2017ல் தொடங்கும். யாருக்கு முதியோர் திருமுழுக்கு? திருமுழுக்கு பெறாத பெரியவர்கள், மற்ற கத்தோலிக்க அல்லாத கிறிஸ்துவ பாரம்பரியத்தில் திருமுழுக்கு பெற்ற பெரியவர்கள். புது நன்மை, உறுதிபூசுதல் அருள்சாதனங்களைப் பெறாத கத்தோலிக்க பெரியவர்கள். அதிச & பணிக்குழு தலைவர்கள் இந்த தகவலை பரப்புங்கள். உங்கள் பெயர்களை இப்பொழுதே பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம். **இறுதி நாள்**: 15/06/2017. மேல் விபரங்களுக்கு பங்கு குருவானவர்கள்: தந். ரோபர்ட் டேனியல்/ தந். ஸைமன் ஆனந்த் (பங்கு அலுவலகம் 05-5279349)/ திரு.ஜேரோம் சாமுவேல்: 05-5268329/ 012-6786911

**6. கத்தோலிக்க நிச்சயிக்கப்பட்ட நிகழ்வு (EE) 2017**

2017ல் அல்லது 2018ல் திருமணம் புரிய திட்டமிட்டுள்ள தம்பதிகள் தயவுசெய்து கத்தோலிக்க நிகழ்வு(EE) தேதிகளை கவனிக்கவும்

| **2017 வாரயிறுதி ஆங்கில நிகழ்வுகள்** | **2017 வாரயிறுதி தமிழ் நிகழ்வுகள்** |
|---|---|
| ஜூன் 9 - 11 ~ பினாங்கு | ஆக 25 - 27 ~ புனித ஜஸ்டன் & இம்பர்ட் சிற்றாலயம், பிறை |
| ஆக 18 - 20 ~ பினாங்கு | நவ 17 - 19 ~ புனித அன்னம்மாள் ஆலயம், புக்கிட் மெர்தாஜாம் |
| நவ 10 - 12 ~ பினாங்கு | |

எல்லா ஆங்கில வாரயிறுதிகளும் ஸ்டெல்லா மேரிஸ், பினாங்கில் நடைபெறும். இந்த நிகழ்வுகள் வெள்ளி மாலை தொடங்கி ஞாயிறு மாலை நிறைவடையும். தயவு செய்து பங்கு குருவானவரை சந்தித்து பதிவு பாரங்களை பெற்றுக்கொள்ளவும்.

**7. வேலைவாய்ப்பு:** கத்தோலிக்க சமூக அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக நாங்கள் ஏழைகளுக்கும், வேலை இல்லாதவர்களுக்கும் வேலையை கொடுக்கின்றோம். கத்தோலிக்கர்களாக இருக்க வேண்டும். வயது 35-45. தனித்தவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள். நல்ல வருமானம் நிச்சயம். மலேசியாவின் அனைத்து மாநிலத்திலும் அடிப்படையாக கொண்ட வேலை. கோலாலம்பூரில் தலைமையகம். தொடர்புக்கு குமாரி. ரின்னி (019-2550703)

**8. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**9. தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்தால் தம்பூன் கல்லறையில் பயன்பாட்டை நீட்டிக்கலாம். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

**10. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**11. அதிச மறுசீரமைப்பு:** பினாங்கு மறைமாவட்ட அதிச அமைப்பு கொள்கைப்படி அதிசக்கள் மறுசீரமைப்பு செய்யப்படும். ஒவ்வொரு அதிசவிலும் 15க்கும் குறைவான குடும்பங்களே இருக்க ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே, 15 குடும்பங்களுக்கும் மேலுள்ள அதிசக்கள் பிரிக்கப்பட்டு, புதிய தனி அதிசக்கள் உருவாக்கப்படும். எப்படி இருப்பினும் முடிவு பங்கின் குருவானவர்களின் விவேகத்திற்கு உட்பட்டது.

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஏப்ரல் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **317,842.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **334,891.43** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**21/05/17 திருப்பலி வசூல்கள்: காலை** 7.00 - RM 1,071.00 **காலை** 9.00 - RM 2,239.00 **மொத்தம்**– RM 3,310.00
**2017** - RM 230.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்